**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS 103/2022

20.03.2025

**<u>வா.சா.1 நாராயணன் த/பெ. ராகவாச்சாரியார் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி .</u>**

வழக்கு சொத்தின் தென் மாவட்டங்களான இராமநாதபுரம் , தூத்துக்குடி சேர்ந்த மக்கள் விசிக்கிரார்கள் என்றாலும் சுமாராக 100 குடும்பம் இருக்கும் என்றால் சரிதான். கோரிமேடு , பிருந்தாநகர், பகுதியில் மட்டுமே அந்த 100 குடும்பங்கள் உள்ள என்றால் சரிதான். எனது தகப்பனார் காலத்திலிருந்தே எங்கள் குடும்பசொத்தை பொறுத்து பல்வேறு வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் 2016 க்கு பின்பு நான் தாக்கல் செய்த வழக்கு மட்டும் தான் தெரியும். எனது தகப்பனார் எத்தனை வழக்கு தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியது. ஜெயலட்சுமி விலாஸ் பள்ளி அது வழக்கு சொத்தில் தான் உள்ளது என்றால் இல்லை மன்னார்குடி அன்னவாசல் தெருவில் உள்ளது, 1978 முதல் 1998 வரை ஜெயலட்சுமி விலாஸ் பள்ளி காலிமனையாக தான் இருந்தது. அதிலும் குடிசைப்போட்டு சிலர் இருந்தார்கள் என்றால் சரியல்ல. எங்கள் அனுமதியின் பேரில் நான்கு பேர் இருந்தார்கள். வழக்கு சொத்துகள் வீட்டு மனைகளாக வருமா என்றால் லே அவுட்டில் வருமா என்றால் லே அவுட்டில் வராது. இந்திரா நகர் மற்றும் கண்ணன் நகர் லே அவுட்டிர்கு நடுவில் உள்ளது. வழக்கு சொத்திற்கு பட்டா என் பெயரில் உள்ளது. வழக்குசொத்தை காட்டக்கூடிய வரைபடம் தாக்கல் செய்துள்ளோ என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் பசுபதிக்கு முன்பு யார் இருந்தார் என்றால் யாரும் இல்லை. தற்போது வழக்கு சொத்தில் கட்டுமானம் உள்ளதா அல்லது காலிமனையாக உள்ளதா என்றால் காலிமனையாக உள்ளது. ஏற்கனவே வழக்கு சொத்தில் திருச்செந்தூரை சேர்ந்த காசிநாதன் மனைவி ராஜேஸ்வரி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எங்கள் கைவிட்டு சென்று எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் கைவிட்டு போகவில்லை என்னிடம் தான் உள்ளது வேலி மட்டும் வைத்துள்ளார் அனுவபம் என்னிடம் தான் உள்ளது. வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் வேலியை அகற்றி என்னிடம் ஒப்படைக்கவும் செலவுத்தொகை கேட்டும் போட்டுள்ளேன். வழக்கு சொத்தில் வேலி அகற்றவேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் 30 ஆண்டுகளுக்கு மேலாக திருச்செந்தூர் இராஜேஸ்வரியிடமிருந்து அதற்கு பின்பு 2012 முதல் பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரியல்ல. 30 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதி வசம் இருந்து வருவதால் என்னுடைய வழக்கு காலவரம்பு சட்டத்திற்கு கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.03.26 16:32:53 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி